DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Tmt.M.Praveena, M.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 61/2024**

**CNR.No: TNTH06-000189 -2024 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வம் | Town | கூடலூர் |
| Father Name | : பாண்டியன் | Taluk | : உத்தமபாளையம் |
| Age | : 40 | **PW1** | |

நாள் : 06.07.2026

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாயம் செய்து வருகிறேன். நான் இதுவரைக்கும் எத்தனை பேருக்கு வட்டிக்கு கடன் கொடுத்துள்ளேன் என்றால் இவ்வழக்கு பிரதிவாதியைத்தவிர நான் வேறு யாருக்கும் வட்டிக்கு கடன் கொடுக்கவில்லை. நான் எவ்வளவு ரூபாய் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன் என்றால் ரூ.80 ஆயிரம் ஆகும். புரோநோட்டில் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் பாண்டியன் மட்டும் கையொப்பம் செய்துள்ளார். எந்த இடத்தில் வைத்து எத்தனை மணிக்கு பணமானது பிரதிவாதிக்கு கடன் கொடுக்கப்பட்டது என்றால் எனது வீட்டில் வைத்து 05.05.2022ம் தேதியில் இரவு 8 மணியளவில் பிரதிவாதி என்னிடம் கடன் பெற்றார்.

2) அந்த சமயத்தில் எனது வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். நாகராணி, பாண்டியன், புரோநோட்டை எழுத அருண்குமாரும் எனது வீட்டிற்கு வந்திருந்தார்கள். ரூ.20 ஆயிரத்திற்கு மேல் பணபரிவர்த்தனையானது இருக்குமானால், அத்தொகைக்கு கட்டாயமாக காசோலை தான் கொடுக்கவேண்டும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் பிரதிவாதிக்கு ரொக்கமானத்தான் பணம் கொடுத்தேன். எனக்கு ரூ.80 ஆயிரம் பிரதிவாதிக்கு கடன் கொடுப்பதற்கான வருமானம் என்ன உள்ளது என்றால் நான் எனது விவசாய நிலத்திலிருந்த நெல்லை

ராசா என்பவருக்கு விற்பனை செய்ததில் அதிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தைத்தான் நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். ராசா என்பவரை விசாரணை செய்தால் அவர் எனக்கு பணம் கொடுத்தாரா, இல்லையா என்பது குறித்து நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்றால் சரிதான்.

3) மேற்படி ராசா என்னிடம் அவ்வாறு எவ்வளவு தொகை கொடுத்தார் என்றால் ரூ.1 லட்சமாகும். மேற்படி ஒருலட்சமும் எனக்கு ரொக்கமாகத்தான் கொடுக்கப்பட்டதா என்றால் அவ்வாறு தான் கொடுக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புரோ நோட்டில் உள்ள கையொப்பமானது தாவா பிரதிவாதியுடையதல்ல என்றும், பிரதிவாதியின் கையெழுத்தை நானாகவே போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 ஆன புரோநோட்டில் 3 பேர் கையொப்பம் செய்துள்ள நிலையில் நான் ஒருவர் மட்டுமே கையொப்பம் செய்துள்ளதாக முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால் புரோநோட்டில் பாண்டியன், அருண்குமார், நாகராணி ஆகிய 3 பேர் கையொப்பம் செய்துள்ளதாக சாட்சி கூறுகிறார்.

4) நாகராணி என்ன வேலை செய்து வருகிறார் என்றால் சத்துணவு கூடத்தில் வேலை செய்து வருகிறார். என்ன வேலை செய்கிறார் என்றால் சமையல் வேலை செய்து வருகிறார்.

(பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2026.07.06 16:55:24 +0300

District Munsif ,
Uthamapalayam.